செ.வெ.எண்.64 நாள்: 28.07.2020

**தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கரிக்குளம் காலணி, குறிஞ்சிநகர், முள்ளக்காடு மற்றும் பழைய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் காய்ச்சல் சிறப்பு முகாமில் சளி மாதிரிகள் சேகரிக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

---

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கரிக்குளம் காலணி, குறிஞ்சிநகர், முள்ளக்காடு மற்றும் பழைய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் காய்ச்சல் சிறப்பு முகாமில் சளி மாதிரிகள் சேகரிக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.07.2020) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நோய் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள அனைவருக்கும் தெர்மல் ஸ்கிரினிங் மற்றும் பல்சஸ் பரிசோதனை செய்ய வேண்டும். ஒரு பகுதியில் சளி, காய்ச்சல் பாதிப்பு உள்ள நபர்கள் அதிக அளவு கண்டறியப்பட்டால் அவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும். கொரோனா தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நபர்களை உடனடியாக தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதுடன், அவர்களுடன் தொடர்பில் இருந்த நபர்களுக்கும் கொரோனா தொற்று பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும். பொதுமக்கள் வீட்டில் இருந்து வெளியே வரும்போது முககவசங்கள் அணிந்து சமூக இடைவெளியை கடைபிடிக்கிறார்களா என்பதை கண்காணித்து கொரோனா தொற்று பரவாமல் தடுப்பு பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையர் திரு.வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப. மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.அருண்குமார் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.